**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 26.09.2025.**

| | |
|---|---|
| **Name : ரஞ்சித்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குள்ளமுடையனூரில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இவ்விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 25.09.2022 ம் தேதி காலை அ.சா.1 அவரது ஸ்பிளண்டர் இரு சக்கர வாகனத்தில் அவரது மனைவி மற்றும் மகன் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டு மேட்டூர் முனியப்பன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக மாலை 4.45 மணிக்கு பொட்டனேரி கவி ஏஜென்சி முன்பாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற சமயத்தில் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது என்றால் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும்.

எனக்கு நேரடியாக ஒன்றும் தெரியாது. பின்னர் அ.சா.1க்கு முன்பாக இரு சக்கர வாகனம் ஜூபிட்டர் லாரியும் பக்க வாட்டில் சென்று கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது எதிரே மேட்டூர் நோக்கி வந்த கார் அதிவேகமாக வந்து வலது பக்கம் ஏறி முன்னால் சென்ற ஜுபிட்டர் வாகனத்தின் மீதும், அ.சா.1ன் வாகனத்தின் மீதும் மோதியதால் கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. லாரி பின்பக்க டயர் ஏறியதால் அ.சா.1ன் மனைவி, மகன் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள் என்றால் பிறகு தெரிந்து கொண்டேன். 3) சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் என்னுடன் ஆவின் பால் பூத்தில் டீ குடித்து கொண்டிருந்த ராஜா மற்றும் தேவேந்திரன் ஆகியோரும் சம்பவத்தை நேரில் பார்த்தோம் என்றும் கார் மோதி விபத்துக்குள்ளான நபரை முதலில் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கும் மற்றும் இறந்து கிடந்த இரு பிரேதங்களை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் ஜூப்பிட்டர் வண்டியை ஓட்டி வந்தவர் மேட்டூரை சேர்ந்த ராஜேந்திரன் என்று தெரிய வந்தது என்றும் அவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்றும் லாரியில் அடிப்பட்டவர்கள் மாட்டுகாரன் என்ற ஊரைச் சேர்ந்த மூர்த்தி என்றும் இறந்தவர்கள் மூர்த்தியின் மனைவி அன்னபூரணி, மகன் மைதீஷ் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியவர் சரவணன், த/பெ.பழனிசாமி என்றும், லாரியை ஓட்டி வந்தவர் கணேசன், த/பெ.பூங்காவனம் என்றும் தெளிவாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 322/2022**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 26.09.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

முதல் விசாரணை

1) நான் குள்ளமுடையனூரில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இவ்விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-

2) கடந்த 25.09.2022ம் தேதி காலை அ.சா.1 அவரது ஸ்பிளண்டர் இரு சக்கர வாகனத்தில் அவரது மனைவி மற்றும் மகன் இருவரையும் உட்கார வைத்துக் கொண்டு மேட்டூர் முனியப்பன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக மாலை 4.45 மணிக்கு பொட்டனேரி கவி ஏஜென்சி முன்பாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்ற சமயத்தில் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது என்றால் அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும்.

எனக்கு நேரடியாக ஒன்றும் தெரியாது. பின்னர் அ.சா.1 க்கு முன்பாக இரு சக்கர வாகனம் ஜூபிட்டர் லாரியும் பக்க வாட்டில் சென்று கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது எதிரே மேட்டூர் நோக்கி வந்த கார் அதிவேகமாக வந்து வலது பக்கம் ஏறி முன்னால் சென்ற ஜுபிட்டர் வாகனத்தின் மீதும், அ.சா.1 ன் வாகனத்தின் மீதும் மோதியதால் கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. லாரி பின்பக்க டயர் ஏறியதால் அ.சா.1 ன் மனைவி, மகன் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள் என்றால் பிறகு தெரிந்து கொண்டேன். 3) சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் என்னுடன் ஆவின் பால் பூத்தில் டீ குடித்து கொண்டிருந்த நான், ரஞ்சித்குமார் மற்றும் தேவேந்திரன் ஆகியோரும் சம்பவத்தை நேரில் பார்த்தோம் என்றும் கார் மோதி விபத்துக்குள்ளான நபரை முதலில் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கும் மற்றும் இறந்து கிடந்த இரு பிரேதங்களை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும் ஜூப்பிட்டர் வண்டியை ஓட்டி வந்தவர் மேட்டூரை சேர்ந்த ராஜேந்திரன் என்று தெரிய வந்தது என்றும் அவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்றும் லாரியில் அடிப்பட்டவர்கள் மாட்டுகாரன் என்ற ஊரைச் சேர்ந்த மூர்த்தி என்றும் இறந்தவர்கள் மூர்த்தியின் மனைவி அன்னபூரணி, மகன் மைதீஷ் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியவர் சரவணன், த/பெ.பழனிசாமி என்றும், லாரியை ஒட்டி வந்தவர் கணேசன், த/பெ.பூங்காவனம் என்றும் தெளிவாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.